# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 68/2019 | Date : 19.06.2026 | PW 1 |
|---|---|---|
| Name: சரவணன் | த/பெ. மகேந்திரன் | |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் குறுக்கப்பட்டியான் வளவில் குடியிருக்கிறேன். நான் கைத்தறி நெசவுத் தொழில் செய்து வருகிறேன். நான் கூலிக்கு வேலை செய்கிறேன். ஒரு வாரத்திற்கு 2 சேலைகள் நெய்து கொடுப்பேன். ஒரு சேலை நெய்வதற்கு ரூ.1,500/– கூலி கொடுப்பார்கள். நான் ஏதாவது தொழிலாளர் வாரியத்தில் உறுப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. நான் 5.9.2016 ந்தேதியில் மகேந்திரா பிக்கப் வேனில் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். அன்றைய தினம் மேற்படி வாகனத்தில் சுமார் 20 நபர்கள் பயணம் செய்திருப்போம் என்றால் 10 நபர்கள் பயணம் செய்தோம். மேற்படி வாகனத்தில் 2 நபர்கள்தான் பயணம் செய்ய அனுமதி உண்டு என்றால் சரிதான். நான் அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு மேல் வேனில் பயணம் செய்ததால் நஷ்டஈடு கொடுப்பதறகு 3ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தனியார் மருத்துவமனையில்தான்மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான்.. எனக்கு ரூ–14,700/– தான் செலவு செய்துள்ளேன் என்றாலும் அதனால் லட்சக்கணக்கில் இழப்பீடு கேட்டுள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. கமலா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான அசல் பில்கள் காணாமல் போனதால் அவற்றை என்னால் தாக்கல் செய்ய முடியவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமானபிறகுதான் என்னை விடுவித்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு எல்லா காயங்களும் குணமாகிவிட்டது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாலிஸி விதிகளை மீறி நான் மேற்படி வாகனத்தில் பயணம் செய்து விபத்து ஏற்பட்டதால் மேற்படி 3ம எதிர்மனுதாரர் நஷ்டஈடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபணம் தாக்கல் செய்யவில்லை என்பதால் நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–சரவணன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.